Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  பங்குனி 02  [15 - 3 - 1993]  திங்கட்கிழமை  ஓசை 25

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அரச நியமனம் கிடைக்காது

1990 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின்னர் அரசாங்க பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமைபுரிபவர்கள் தொடர்பாக கல்விச் சேவைகள் சபைக்கு எந்தப் பொறுப்பும் இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அரசாங்கப் பாடசாலைகவில் தொண்டர் ஆசிரியர்களுக்கு எந்தக் காரணம் கொண்டும் நியமனம் வழங்கப்பட மாட்டாதென்று கல்விச் சேவைகள் சபை தெரிவித்துள்ளது. அண்மைக் காலங்களில் சுமார் 25,000 பேர் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றினர் என்றும் இவர்களில் தகுதியான [4ஆம் பக்கம் பார்க்க]

# பிரச்சினையைதீர்க்க அரசு விரும்பவில்லை

## எதிர்க்கட்சியினர் கண்டனம்

[கொழும்பு]

இனப்பிரச்சினையை தீர்ப்பதன்மூலம் யுத்தத்திற்கு முடிவுகாண இந்த அரசாங்கம் விரும்பவில்லை. பிரச்சினையை நீடிப்பதன்மூலம் தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் இந்த அரசாங்கம் நொண்டிச்சாட்டுக்களைக் கூறிக்கொண்டிருக்கிறது, பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் அரசிடம் சிறிதும் இல்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற பொறுப்பு அரசிடம் இருப்பதாகத்தெரியவில்லை. மாறாக உலக வரலாற்றில் உள்ள முப்பது ஆண்டு யுத்தம் போல் இந்த யுத்தத்தையும் அரசு நீடிக்க விரும்புகின்றது என்று கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அரசு இந்த யுத்தத்தை ஒரு கெரில்லா யுத்தம் என்கிறது. அப்படியானால் அரசு ஏன் மரபுரீதியான யுத்தத்தைச் செய்ய வேண்டும். அரசு அதன் யுத்த தந்திரங்களை மாற்றி யுத்தத்தை வெல்ல வேண்டும் என்றும்,

உரிய காலத்தில் ஊர்காவற் படையினரின் சம்பளம் வழங்கப்படுவதில்லை அவர்கள் மாற்றார்ந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப் படுகின்றனர் என்றும்,

ஒக்ரோபர் 31, 1992 வரை 3,700 படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 7,500 படை வீரர் காயமுற்றுள்ளனர். அல்லது அங்கவீனர்களாகி உள்ளனர் என்றும் அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## கடற்படை அட்டகாசத்தால் மீனவர் பெரும் பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற் பிராந்தியத்தில் கடந்த சில தினங்களாக கடற்படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன. இக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் இரவு பகலாக விசைப் படகுகளில் ரோந்துச் சேவைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

நேற்று அதிகாலை இக்கடற் பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கண்மூடித்தனமான ஷெல், பீரங்கித் தாக்குதல்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் ஏவி விட்டனர். இருந்த போதிலும் மீனவர்கள் ஆபத்துக்கள் எதுவுமின்றி கரையை வந்துசேர்ந்ததாக மீனவ வட்டாரங்கள் தெரிவித்தன

சிறிலங்கா கடற்படையினரின் இக்கெடுபிடி நிலையால் சுயதொழிலான கடற்தொழிலை சுதந்திரமாக செய்ய முடியாதிருப்பதாகவும் இது பற்றி யாழ். அரச அதிபருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் தெரிவித்தும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



லெப். திருவருட்செல்வன் (மோகன்ராம்)



லெப். மாறன்

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த லெப்டினன்ட் திருவருட் செல்வன் மோகன்ராம் (பூபாலுப்பிள்ளை சிறி-நாவற்குடா பெரிய போரைதீவு-மட்டக்களப்பு), லெப்டினன்ட்

# சிங்கள இளைஞர் வடக்கில் துன்பம்

## ஹெல உறுமய கவலை

[கொழும்பு]

தமிழர் தலைவர்களுடன் முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை எதிர்த்தமையால் இன்று சிங்கள இளைஞர்கள் வடக்கில் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். தமது உயிரை வீணாக இழக்கின்றனர் என ஹெல உறுமய அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றிய பற்றந்தாரே சுமணஜோதி தேரோ தெரிவித்தார்.

டட்லி-செல்வா ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம் போன்றவற்றை நாம எதிர்த்தோம். இது தான் நாம் செய்த பெரும்பிழை. அதன் விளைவுகளை நாம் அப்போது உணரத் தவறிவிட்டோம். இந்த ஒப்பந்தங்களை அன்று நாம் ஆதரித்து இருந்தால் வடக்கு, கிழக்கு பிரச்சினையே எழுந்திருக்காது என்று காலி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற ஹெல உறுமய அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றிய பற்றந்தாரே சுமண ஜோதி தேரோ தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், அரசாங்கம் இன்று தமிழையும் அரசாங்க மொழியாக்கியுள்ளது. ஆனால் இது பிரச்சினைகளைத் தீர்க்காது. வடக்கிலுள்ள இளைஞர்களின் குறிக்கோள் ஈழம் ஒன்றேயாகும். எமது இளைஞர்கள் வடக்கில் துன்பப்பட்டு இறக்கின்றனர். அரசியல் வாதிகள் தாங்கள் இருக்கும்வரை அமைச்சர்பதவிகளிலும்எம்.பி பதவிகளிலும் இருக்கவே துடிக்கின்றனர். இந்த நாட்டில் பிரச்சினைக்காக தமது பதவியை இராஜினமாகச் செய்த ஒரேஒரு அமைச்சர் காமினி ஜயசூரியாவே என்றும் தெரிவித்தார்.

# கிழக்கை ஆக்கிரமிக்க சிறிலங்கா அரசு முயற்சி

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு -அம்பாறை - திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தென்தமிழீழத்தை முற்றுமுழுதான இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரும் முயற்சிகளில், சிங்கள அரசு இறங்கியுள்ளது.

அப்பகுதியின் கேந்திர

க்க் கோட்பாட்டைச் சிதைப்பதுதான், இப்படைநடவடிக்கைகளுக்கான அரசியல் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே சிறிலங்கா அரசு தனது படைபலத்தை ஒருங்கு திரட்டி, தென் தமிழீழம் மீது பிரயோகிக்க முடிவெடுத்துள்ளது.

## கட்டைக்காட்டுப் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்கள்

(தென்மராட்சி)

பரா வெளிச்சம் பாய்ச்சி துப்

# கடற்படை அட்டகாசத்தால் மீனவர் பெரும் பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற் பிராந்தியத்தில் கடந்த சில தினங்களாக கடற்படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன. இக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் இரவு பகலாக விசைப் படகுகளில் ரோந்துச் சேவைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

நேற்று அதிகாலை இக்கடற் பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கண்மூடித்தனமான ஷெல், பீரங்கித் தாக்குதல்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் ஏவி விட்டனர். இருந்த போதிலும் மீனவர்கள் ஆபத்துக்கள் எதுவுமின்றி கரையை வந்துசேர்ந்ததாக மீனவ வட்டாரங்கள் தெரிவித்தன


சிறிலங்கா கடற்படையினரின் இக்கெடுபிடி நிலையால் சுயதொழிலான கடற் தொழிலை சுதந்திரமாக செய்ய முடியாதிருப்பதாகவும் இது பற்றி யாழ். அரச அதிபருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் தெரிவித்தும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அதன் யுத்த தந்திரங்களை மாற்றி யுத்தத்தை வெல்ல வேண்டும் என்றும்,

உரிய காலத்தில் ஊர்காவற் படையினரின் சம்பளம் வழங்கப்படுவதில்லை அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப் படுகின்றனர் என்றும்,

ஒக்ரோபர் 31, 1992 வரை 3,700 படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 7,500 படை வீரர் காயமுற்றுள்ளனர். அல்லது அங்கவீனர்களாகி உள்ளனர் என்றும் அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.



லெப். மாறன்

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த லெப்டினன்ட் திருவருட் செல்வன் மோகன்ராம் (பூபாலுப்பிள்ளை சிறி-நாவற்குடா பெரிய போரைதீவு-மட்டக்களப்பு), லெப்டினன்ட் மாறன் (மகாலிங்கம் - வரதராஜா, கொக்குத்தொடுவாய், 17-ம் கட்டை) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மூன்று மீனவர்கள் கடற்படையால் கைது

## படகுகளை நோக்கித் தாக்குதல்

(தொல்புரம்)

சுழிபுரம் புளியந்துறை சவுக்கடியிலிருந்து நேற்று முன்தினம் இரவு கடலில் மீன் பிடிப்பதற்காகக் கட்டுமரத்தில் சென்ற மீனவர்கள் மூவர் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகிறது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது நேற்று முன்தினம் இரவு11 00 மணியளவில் சுழிபுரம் கடற் கரையில் இருந்து மிக அருகில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சுமார் 30 இற்கும் அதிகமான கட்டுமரங்களை நோக்கி சிறிலங்காக் கடற்படையினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்த வண்ணம் நெருங்கிய சமயம் ஒரு கட்டுமரம் தவிர்ந்த மிகுதிக் கட்டுமரங்கள் தப்பித்துக்கரை வந்து சோந்தன.

சுழிபுரம் மேற்கு றாத்தலடியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தையா சிவராசா (வயது 34)' எட்டுப் பிள்ளைகளின் தந்தையான அம்பலம் மதியாபரணம் (வயது 48), நாலு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி நாகராசா (வயது 40) ஆகியோரே காணாமல் போனவர்கள் ஆவர்.

இவர்கள் சிறிலங்கா கடற் படையினரிடம் சிக்கியிருக்கலாம் எனப் பேசப்படுகிறது. இச்சம்பவம்பற்றி மேற்படி காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(41), (பா), (நி)

## வெளிச்சம் பாய்ச்சியபடி படகுஒன்றுவிரைந்துவந்தது

(தொல்புரம்)

சுழிபுரம் கடற்பரப்பில் நாம் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது எம்மைநோக்கி விரைந்துவந்த சிறிலங்கா கடற் படையினர் எமக்கு அருகில் நின்று மீன் பிடித்துக்கொண்டிருந்த கட்டுமரத்தை நோக்கி வெளிச்சம் பாய்ச்சியபடி நெருங்கிச் சென்றனர். இதனால் நாம் படகைத் திருப்பிக் கொண்டு தப்பிவந்தோமென சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த கந்தையா சிவநேசன் (வயது 24) என்பவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தானும், பாலன் சரவணபவன் (வயது 18), சின்னத்துரை ஜீவாகரன் (வயது 20) ஆகிய மூவரும் சுழிபுரம் புளியந்துறை சவுக்கடித்துறையில் இருந்து நேற்று முன் தினம் புறப்பட்டதாகவும், நள்ளிரவு 12.30 மணியளவில் காரைநகர் பக்கமாக இருந்துவந்த கடற்படையினரின் ரோந்துப் படகு தம்மை அண்மித்த போது இன்னும் பலர் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகவும், கிட்ட நெருங்கிய ரோந்துப் படகிலிருந்தவர்கள் அடோ, அடோ எனக் கூவி அழைத்தும், தகாதவார்த்தைகளால் தமிழா என்று கூப்பிட்டும் தமக்கு அருகில் நின்ற கட்டுமரத்தை நாடி ஏதோ கடும்வார்த்தைகள் பேசும் சத்தம் கேட்டதாகவும் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)


உளவாளிகள் !!!

அவதானமாக இருக்கவும்...!

எங்கள் அயலிலும் ஊடுருவி இருப்பார்கள்

ஊர்விட்டு ஊர்தாவி அலைந்து திரிவார்கள்.




வீரவேங்கை அன்சார் (தாமோதரன்)

பண்டத்தரிப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை அன்சார் தாமோதரன் (சீவரத்தினம் சிறிகாந்த்' ஓடக்கரை பருத்தித்துறை) வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த அன்சாருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கிளாலி - பூநகரி

## படகுச்சேவை

கிளாலி பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரச்சினையே எழுந்திருக்காது என்று காலி விளையாட்டுத் திடலில் நடை

வடக்கிலுள்ள இளைஞர்களின் குறிக்கோள் ஈழம் ஒன்றேயாகும். எமது இளைஞர்கள்

செய்த ஒரேஒரு அமைச்சர் காமினி ஜயசூரியாவே என்றும் தெரிவித்தார்.

# கிழக்கை ஆக்கிரமிக்க சிறிலங்கா அரசு முயற்சி

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு -அம்பாறை - திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தென்தமிழீழத்தை முற்றுமுழுதான இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரும் முயற்சிகளில், சிங்கள அரசு இறங்கியுள்ளது.

அப்பகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேலும் பல இராணுவ முகாம்களை நிறுவியும். ஆட்பற்றாக் குறையைத் தீர்க்க பொலீஸ் படையைப் பயன்படுத்தியும், தென் தமிழீழத்தைப் படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டபடியிருக்கின்றது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பாரிய இராணுவ நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் தென்தமிழீழ நிலப்பரப்பிலிருந்து புலிகளை முற்றுமுழுதாக விரட்டி, பின் அங்கே பெருமளவில் சிங்களவர்களைக் குடியமர்த்திக் கிழக்கைச் சிங்களமயமாக்கி, தமிழீழ தேசியத்தின் முதுகெலும்பான தாயக் கோட்பாட்டைச் சிதைப்பதுதான், இப்படைநடவடிக்கைகளுக்கான அரசியல் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே சிறிலங்கா அரசு தனது படைபலத்தை ஒருங்கு திரட்டி, தென் தமிழீழம் மீது பிரயோகிக்க முடிவெடுத்துள்ளது.

## இடைக்காட்டில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இடைக்காடு பகுதியில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆ. கந்தையா (வயது 78) பாடசாலை வீதி, இடைக்காட்டைச் சேர்ந்தவர் காயம் அடைந்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிப்பாய் காயம்

(அம்பாறை)

எம். ஜி. கலகொடபிட்டியா (வயது 23) என்ற இராணுவ வீரர் கண்ணிவெடியில் சிக்கி பாரிய காயங்களுக்கு உள்ளானார். இச்சம்பவம் கடந்த வாரம் அம்பாறையில் இடம் பெற்றது.

ரோந்து நடவடிக்கையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காட்டுப் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்கள்

(தென்மராட்சி)

கட்டைக்காடு இராணுவ முகாம் பகுதிகளில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு 9 00 மணியளவில் 'ஷெல்' தாக்குதல் இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. அதே வேளை பரா வெளிச்சம் பாய்ச்சி துப்பாக்கி வேட்டுக்களும் கேட்ட வண்ணம் இருந்ததாகவும் இச் சத்தங்கள் சுமார் அரைமணி நேரம் நீடித்ததாகவும். தெரிவிக்கப்படுகின்றது. (86)

## பம்பாய் குண்டுவெடிப்பு புலிகளுக்குத் தொடர்பில்லை

லோறன்ஸ் திலகர் தெரிவிப்பு

பம்பாய் நகர் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்று புலிகளின் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவின் மரணத்துக்குப் பழிவாங்கும் நோக்கமாக புலிகள் பம்பாய் நகரில் குண்டுகள் வைத்திருக்கலாம் என்ற வதந்திகள் தொடர்பாக கேட்டபோதே லோறன்ஸ் திலகர் இவ்வாறு கூறினார்.

இந்தியாவுக்கு எதிராகப் பழிவாங்கும் திட்டம் எதுவும் எம்மிடமில்லை. ஆனால்கிட்டுவின் மரணம் தொடர்பாக இந்தியாவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருகிறோம் என்றும் லோறன்ஸ் திலகர் பி. பி. ஸிக்கு மேலும் தெரிவித்தார்.

## டாக்டர், சிவகுமாரனுக்கு மகரயாழ் விருது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் இவ்வாண்டுக்கான தனது ''மகர யாழ்'' விருதை வைத்தியத்துறையில் சேவையாற்றும் டாக்டர் சபாரட்ணம் சிவகுமாரன் என்பவருக்கு வழங்கவுள்ளது. 47 வயதையுடைய இவ்வைத்திய நிபுணர் சுமார் 12 வருடங்களாக யாழ். போதனா மருத்துவ மனையில் சேவையாற்றி வருகிறார்.

மக்கள் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அறிஞர் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சின்படி, இவ்வாண்டுக்கான 'மகரயாழ் விருது'க்குரிய சான்றோராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என கம்பன் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் சிவகுமாரன் அவர்கள் ஈழத்தின் புகழ்பூத்த கல்விமானும்,



யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான அமரர். திரு. ந. சபாரட்னம், லீலாவதி தம்பதிகளின் புதல்வராவர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மீண்டும் இயங்குகிறது

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம். எம்மிடம், சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட். மூத்தவிநாயகர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. வாங்குவோர் வசதிக்காக தொடர்புமுகவரி: ஷண் வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவை, பஸ் நிலையம், யாழ்நகர். (4072)

### ஸ்ரீலங்கா அச்சகம்

(புத்தகசாலையல்ல)

ஸ்ரீகாந்தா அச்சக லேன்-ராஜா தியேட்டர் அருகாமை தனது சொந்த இடத்திலேயே இயங்கிக்கொண்டிருக்கிறதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கின்றோம். 234A, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (4457)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், மற்றும் மின்சார உபகரணங்கள் எலக்ரோனிக், ஓட்டோமற்றிக் கடிகாரங்கள், மேசை, சுவர் மணிக்கூடுகள், உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள நாடுங்கள். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்3, கண்டிவீதி, (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி-6126)

### கலைப்பீடம் முதலிடம்

யாழ். பல்கலைக்கழகத்தில் பீடங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் கலைப்பீடம் 331 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது. விஞ்ஞான பீடம் 200 1/2 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மருத்துவ பீடம் 133 1/2 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றது.

இம்முறை பத்து புதிய சாதனைகளும் நிகழ்த்தப்பட்டன.

## மட்டு. வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலும் பெரும் மருந்துபொருள்கள் பற்றாக்குறையும் வைத்தியர்களுக்கான பற்றாக் குறையும் நிலவுவதாக தெரியவருகின்றது. வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள்கூட குறைவாகவே காணப்படுகின்றன.

இவ் வைத்தியசாலைக்கென சத்திர சிகிச்சை நிபுணர்கள் எவரும்இல்லை. சேவை அடிப்படையில் பிரான்ஸ் வைத்தியர் ஒருவரே சத்திர சிகிச்சை நிபுணராக பணியாற்றுகின்றார். இவ்வைத்தியசாலைக்கு 7 வைத்திய நிபுணர்கள் தேவைப்பட்டபோதிலும் இருவர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். வெளிநோயாளர் பிரிவிற்கு 12 வைத்தியர்கள் தேவைப்பட்ட போதிலும் 4 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

சட்ட வைத்திய அதிகாரி மற்றும் காது, மூக்கு, தொண்டை வைத்திய அதிகாரி எவரும் இவ் வைத்தியசாலையில் பணியில் இல்லை.

பனடோல் உட்பட மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் லயன்ஸ் கழகம் அகதிகள் விழிப்புலனற்றோர் நிவாரண சுயதொழில் முயற்சிக்கு நிதி உதவி செய்வதற்காக பரியோவான் கல்லூரி மண்டபத்தில் 20. 03. 93ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெற ஒழுங்கு செய்திருந்த முத்தமிழ் கலைவிழா தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்விழாவை இரு தினங்களுக்கு முன்பாக 18. 03. 93 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது. இத்திகதி மாற்றத்தை லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கல்லூரிகளின் லியோக் கழக உறுப்பினர்களும் மற்றும் எமது ஆதரவாளர்களும் கவனத்தில் எடுக்கும்படி அன்பாக கேட்டுக்கொள்கிறோம்.

க. இராசலிங்கம்
செயலாளர்

வ. பரமசிவம்
தலைவர்
நல்லூர் லயன்ஸ் கழகம்

(4458)

## கட்டாக்காலி நாய்களை அழித்தல்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை இன்று தொடக்கம் 1993. 12. 31 வரை பிடித்து அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே வளர்ப்பு நாய்களைக் கட்டிவளர்க்குமாறு பொது மக்கள் வேண்டப்படுகின்றார்கள்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
11. 3. 93.

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்

(சி-6187)

## அளவெட்டி வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் (18-3-93) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் மடத்தில் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் பல முக்கிய விடயங்கள் ஆலோசிக்க இருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்
க. நாகலிங்கம்

(4459)

## இந்து மத குருமார்களுக்கு நிவாரணம்

## இராணுவத்தின் பேரால் பலர் மோசடியாம்

அங்கவீனமடைந்துள்ள இராணுவத்தினருக்கு புனர்வாழ்வு அளிக்கவெனக் கோரி நிதி மற்றும் உதவிப்பொருள்கள் சேர்க்கப்பட்டு மோசடி செய்யப்படுவதாக கூட்டுப் படைத் தலைமையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் பலதரப்பட்ட இயக்கங்கள் மற்றும் தனிநபர்கள் இந்த மோசடியில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், நிதிசேகரிப்பு மற்றும் உதவிப்பொருள் திரட்டுதல் என்பன சஞ்சிகைகள், கலண்டர்கள், பாக்கெட் கலண்டர்கள், டயறிகள் போன்றவற்றை வெளியிட்டு அவற்றுடன் இணைத்து அனுப்பப் படும் கடிதங்கள் மூலம் நடைபெறுவதாகவும் கூட்டுப் படைத் தலைமையகத்தின் எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது

மேலும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதற்கு கூட்டுப்படை, செயலாற்று தலைமையகமோ அல்லது இராணுவ கடற்படைவிமானப்படை அல்லது பொலீஸ்தலைமையகமோ எவருக்கும் அனுமதி அளிக்கவில்லை எனவும், கூட்டுப் படைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மீண்டும் பிரஜாவுரிமை

(கொழும்பு)

வெளிநாடுகளில் வாழும் இலங்கையருக்கு மீண்டும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் வகையில் பிரஜாவுரிமைச் சட்டம் திருத்தப்படுகிறது என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் ஹமீத் கூறியுள்ளார். இதன் மூலம் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் இலங்கைப் பிரஜா உரிமையைப் பெற ஒரு லட்சம் ரூபா அறவிடப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது

அமைச்சர் ஹமீத் மேலும் கூறுகையில், இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியாமல்இருப்பதே 85,000 இந்தியப் பிரஜைகளையும் திருப்பி அனுப்ப முடியாமைக்கு ஒரே காரணம் என்றும் குறிப்பிட்டார்

### சிறுத்தீவு உற்சவம் இம்முறையும் இல்லை

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்துக்கு அண்மித்துள்ள சிறுத்தீவு புனித லூர்து அன்னை ஆலய வருடாந்தத் திருநாள் கடந்த சில ஆண்டுகளைப்போன்று இம்முறையும் நடைபெறமாட்டாதெனபங்குத்தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகள் தெரிவித்தார். [21]

### வர்த்தக ஊழியருக்கு

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க முன்வந்துள்ளது.

எதிர்வரும் சித்திரை மாதத்திலிருந்து இவ் அடையாள அட்டை வழங்கவிருப்பதால் அங்கத்தவர்கள் பாஸ்போட் அளவான இரண்டு புகைப் படங்களை சங்க நிர்வாகச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. [88]

### தந்தையின் தொழில் கோரப்படமாட்டாது

பிறப்புச்சான்றிதழ் பத்திரங்களில் இனிமேல் தந்தையின் தொழில் விபரம் கேட்கப்படமாட்டாது. பிறப்புச் சான்றிதழில் இருந்து வந்த

### ஓவியப் போட்டியில் தீவகம் முன்னணியில்

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் 3-ம் இடத்தை மண்டைதீவு திருமதி தனபாக்கியம் இராசலிங்கம் அவர்களும், இரண்டாமிடத்தை இவரது மாணவியான ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செல்வி ம. ஜக்குலின் அவர்களும், முதலாமிடத்தை இவரது மகளும், மாணவியுமான செல்வி நர்மதா இராசலிங்கம் அவர்களும் பெற்றுள்ளனர். தீவகத்தைச் சேர்ந்த இவர்களுக்கு, முதல் மூன்று இடங்களையும்தீவகத்திற்குப்பெற்றுத் தந்தமைக்காக இவர்கள் தீவக மக்களால் பாராட்டப்பட்டுள்ளனர்.

### உணவு தயாரித்தலில் பரிசு பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தையொட்டி யாழ். கல்வித் திணைக்கள மனைப் பொருளியல் பிரிவும் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடாத்திய உள்ளூர் வளங்களிலிருந்து உணவு தயாரித்தல் கண்காட்சியில் கலாலயா முதலாவது இடத்தைப் பெற்றது.

பாடசாலை மட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், தனிநபர் பிரிவில் திருமதி மரியநாயகமும் முதலாவது இடத்தைப் பெற்றனர். (42)

### நிர்வாகிகள் தெரிவு

(குருநகர்)

பாசையூர், நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகக் கூட்டம் சமீபத்தில் பாசையூர் புனித அந்

## கிளிநொச்சியில் மாதாந்தம் ஆய்வுக் கூட்டம்

### பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஏற்பாடு

(கிளிநொச்சி)

மாதந்தோறும் அம்மாத நடுப்பகுதியில் கிளிநொச்சி கோட்ட பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பணிமனையில் ஆய்வு கூட்டம் நடைபெற்று வருகிறது. இந் நிகழ்ச்சிக்கு மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள் திட்ட உப குழுக்கள் விவசாய நலன் புரிச் சங்க அங்கத்தினர்கள் உற்பத்திக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் சமுகம் அளித்து மாவட்டத்தின் தேவைகருதிஒவ்வொரு தலைப்புகளின் கீழ் ஆய்வு நடத்திஒரேயடித் தீர்வை மேற்கொள்கின்றனர்.

இம்மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் 'பயிரும் பயிர் அபிவிருத்தியும்' என்றதலைப்பில்சிறுபோக வேளாண்மை திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதனைக் கண்காணிப்பதற்கு ஏழு பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. (16)

## அரியாலை கிழக்கு அம்மன் ஆலய நிதிக்காக

ஆண், பெண், சிறார்கள் ஒன்றுசேர்ந்து நடிக்கும்

அண்ணாவியார் வ. தம்பிஐயாவின்

### இனிய காத்தவராயன்

(சிந்துநடைக்கூத்து)

காலம்: 15-03-93 திங்கள் (இன்று)
இரவு 7.00 மணி

இடம்: ஆலய முன்றல்

உங்கள் ஆதரவை நாடுகின்றோம். (4476)

## வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க நிர்வாகமானது இரண்டு வருட காலமாக சங்கத்திற்கு ஆற்றிய சேவையினையும் தொழிலாளருக்கு ஆற்றிய சேவையினையும் தையல், தட்டச்சு மாணவர்களுக்கு ஆற்றிய சேவையினையும் பாராட்டுவதோடு இனிவரப் போகும் புதிய நிர்வாகமானது சங்கத்திற்கும் தொழிலாளர்கட்கும், மாணவர்களுக்கும் தொடர்ந்தும் நற்பணிகளை திறம்பட நடாத்த சங்க மாணவ ஒன்றியம் சார்பில் வாழ்த்துகின்றோம்.

71, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

வட பிராந்திய
சுருட்டுத் தொழிளார் சங்க
மாணவர் ஒன்றியம்

(சி-6201)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-15

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். 2-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1988 ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

நவம் (இரத்தினம் குகராசா - திரியாய் - திருமலை)

மூர்த்தி (செல்லையா ஜீவராசா - திரியாய் - திருமலை)

திருமலை - தம்பலகமம் பகுதியில் இந்தியப்படையினரால் பேரூந்திலிருந்து இறக்கப்பட்டு, அடித்துக் கொல்

வேக்ஸ்3, கண்டிவீதி, (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி-6126)

11. 3. 93. (சி-6187)

கொக்குவில். (சி-6201)

## கலைப்பீடம் முதலிடம்

யாழ். பல்கலைக்கழகத்தில் பீடங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் கலைப்பீடம் 331 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது. விஞ்ஞானபீடம் 200 1/2 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் மருத்துவபீடம் 133 1/2 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றது.

இம்முறை பத்து புதிய சாதனைகளும் நிகழ்த்தப்பட்டன.

## யாழ். பல்கலைக் கழக வெளியீடுகள்

பின்வரும் நூல்கள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் நிர்வாகக் கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

1. வித்துவ சிரோமணி சி. கணேசையரது வாழ்க்கையும் பணியும்-சி சிவலிங்கராசா (ரூபா 30/-)
2. பண்டைய தமிழகம்- கலாநிதி சி. க. சிற்றம்பலம் (ரூபா 375/-)
3. நூலகவியலில் பட்டியலாக்கம் - விமலாம்பிகை பாலசுந்தரம் (ரூபா 60 )
4. Political Communication and the Electoral Process - Dr S. K S. Nathan Rs.35/-)
5. யாழ்ப்பாண இராச்சியம்—பதிப்பாசிரியர்: கலாநிதி சி.க.சிற்றம்பலம் ரூபா 450/-

பதிவாளர்

யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 03.12

(சி/6193)

அளவெட்டி வடக்கு
ஐக்கிய நாணய சங்கத்தின்

## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் (18-3-93) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் மடத்தில் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் பல முக்கிய விடயங்கள் ஆலோசிக்க இருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்
க. நாகலிங்கம்

(4459)

இந்து மத குருமார்களுக்கு

## நிவாரணம்

இராணுவ நடவடிக்கை காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த இந்துமத குருமார்களுக்கு இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் முதல் கட்ட நிவாரணமாக சங்க உறுப்பினர் குடும்பங்களுக்கு 2கிலோ அரிசி, 1கிலோ சீனி, 2கிலோ மா, சோப் 2 என்பன இலவசமாக வழங்க தீர்மானித்துள்ளோம். முன்பு பதிந்துள்ளவர்களும் புதிதாக பதிய இருப்பவர்களும் குடும்ப அட்டையுடன் வந்து நிவாரணப் பொருள்களை பெற்றுக் கொள்ளலாம். இன்று தொடக்கம் 22, பிறவுண் வீதி, நீராவியடி விலாசத்தில், பி. ப. 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை வழங்கப்படும்.

நன்றி

பொதுச் செயலாளர்
இந்து மத குருமார் ஒன்றியம்

(சி-6197)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:-
3. 11. 1930

உதிர்வு:-
15. 3. 1988

அமரர்

### திருமதி தயாபரசுந்தரி சிறீநடராஜ்

காற்றாகிப் போனதுவோ ஆண்டுகள் ஐந்து
காலக்கலண்டர் நோக்காவிடின்
நேற்றும் நீர் வாழ்ந்தது போல் ஓர் நினைவு.

அன்பு மறவாத
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

'ராஜ் மகால்'
மானிப்பாய் வீதி,
உரும்பராய். (4445)

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க முன்வந்துள்ளது.

எதிர்வரும் சித்திரை மாதத்திலிருந்து இவ் அடையாள அட்டை வழங்கவிருப்பதால் அங்கத்தவர்கள் பாஸ்போட் அளவான இரண்டு புகைப் படங்களை சங்க நிர்வாகச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. [88]

## தந்தையின் தொழில் கோரப்படமாட்டாது

பிறப்புச்சான்றிதழ் பத்திரங்களில் இனிமேல் தந்தையின் தொழில் விபரம் கேட்கப்படமாட்டாது. பிறப்புச் சான்றிதழில் இருந்து வந்த இந்தப்பகுதி நீக்கப்படும்.

அமைச்சர் பெஸ்டஸ்பெரேராவின் இந்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது. அங்கீகாரத்திற்காக இது பாராளுமன்றத்தில் பின்னர் சமர்ப்பிக்கப்படும்.

## நெல் கொள்வனவு

(கிளிநொச்சி)

கரைச்சி தெ.ப.நோ.கூ சங்கத்தினால் தற்போது நெல் 700 ரூபாவுக்கும், உழுந்து, பயறு 23ரூபாவுக்கும், கௌப்பி 18 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

இத்தீர்மானம் 27-2-93-ல் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பஞ்சலிங்கம் தலைமையில் கிளிநொச்சி கச்சேரி மண்டபத்தில் நடைபெற்ற விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் ஆய்வுக்கருத்தரங்கில் மேற்கொள்ளப்படடிருந்ததற்கிணங்க எடுக்கப்பட்டது. (16)

## பரிசு பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தையொட்டி யாழ். கல்வித் திணைக்கள மனைப் பொருளியல் பிரிவும் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடாத்திய உள்ளூர் வளங்களிலிருந்து உணவு தயாரித்தல் கண்காட்சியில் கலாலயா முதலாவது இடத்தைப் பெற்றது.

பாடசாலை மட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், தனிநபர் பிரிவில் திருமதி மரியநாயகமும் முதலாவது இடத்தைப் பெற்றனர். (42)

## நிர்வாகிகள் தெரிவு

(குருநகர்)

பாசையூர், நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகக் கூட்டம் சமீபத்தில் பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது கீழ்க் கண்டோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. மு. சிங்கராயர், செயலாளர்: திரு. தே. சத்தியசீலன், உபசெயலாளர்: திரு. அ. யோசேப், பொருளாளர்: திரு. அ. றொபின்சன். ஏழு பேர்கள் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (21)

## விபத்தில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

ஐஸ்கிறீம் வாகனத்தின் மறைவில் நின்றுவிட்டு வீதியைக் கடக்க முயன்ற சிறுவன் வான் ஒன்றினால் மோதுண்டு தூக்கி எறியப்பட்டான் தாவடியைச் சேர்ந்த தர்சன் (வயது 11) என்ற சிறுவன் ஐஸ் கிறீம் வாங்கிய பின் வீதியைக் கடக்க முயன்றபோதே இவ் விபத்து இடம்பெற்றது. (சி)

## யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 07 அனுமதி 1993

(1992ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற 1991-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற 1991-ம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இவ்வருடம் ஆண்டு 07 இல் அனுமதி வழங்கப்படவுள்ளது.

அனுமதி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதோடு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரிடமிருந்து மாணவி புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி, சுட்டிலக்கம் ஆகியவற்றையும் உறுதிப்படுத்தி 26 3. 1993 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்
14.03.93

-அதிபர்

(சி-6200)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-15

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். 2-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1988 ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**நவம்** (இரத்தினம் குகராசா - திரியாய் - திருமலை)

**மூர்த்தி** (செல்லையா ஜீவராசா - திரியாய் - திருமலை)

திருமலை - தம்பலகமம் பகுதியில் இந்தியப்படையினரால் பேரூந்திலிருந்து இறக்கப்பட்டு, அடித்துக் கொல்லப்பட்ட 3 தமிழ்ப் பயணிகள்.

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஸ்கந்தபுரம், இல. 307 ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு திருமலை சேனையூர்ப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். காமன்** (நாகலிங்கம் கதிர்காமத்தம்பி - கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

**ஜெயா** (கணபதிப்பிள்ளை திருச்செல்வம் - கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)

மணலாறு அளம்பில் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். விக்ரம்** (கிருஷ்ணபிள்ளை சவுந்தரப்பிள்ளை-கள்ளப்பாடு- முல்லைத்தீவு)

**ரமேஸ்** (ஆறுமுகம் பாலநாதன்-குமுழமுனை-மணலாறு)

மட்டு - கோட்டைக் கல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தில் சடலமாக ஒப்படைக்கப்பட்ட கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக் கழக வைத்தியபீட 2-ம் ஆண்டு தமிழ் மாணவன்.

மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து யாழ்.மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**அனஸ்** (ஆறுமுகம் ஜெகானந்தராசா - புளியம்பொக்கணை - பரந்தன்)

மட்டு - தளவாய்ப் பகுதியில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1992 ஆம் ஆண்டு மட்டு- பாலையடிவெட்டைப் பகுதியை முற்றுகையிட முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். வேணு - வேணுசங்கர்** (சிவலிங்கம் சுந்தரமூர்த்தி - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை - மட்டு)

மன்னார் - பேசாலை வீதியில் சுற்றிவளைத்த இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6194)

நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

அரசியல் ஞானி சந்தர்ப்பத்தை உருவாக்குவார்
சந்தர்ப்பம் அரசியல்வாதிகளை உருவாக்கும்
– தாமஸ் ஏமூர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# தமிழர்கள் போர் வெறியர்களல்ல

பாராளுமன்றத் தெரிவுக்குழு இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு, யுத்தத்தை மேலும் நீடித்துச் செல்வதற்கு உதவுமே ஒழிய பிரச்சினைக்கு தீர்வு எதையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை என இலங்கையின் அரசியல் நிலைவரத்தைக் கணிப்பீடு செய்துள்ள பி. பி. ஸி. விமர்சனம் செய்துள்ளது. மேலும், யுத்தம் நீடிக்குமானால் பாரிய உயிர், பொருள் சேதம் ஏற்படும் எனவும், ஆகையினால் சிறிலங்கா ஜனாதிபதி வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி பரிசீலிக்க வேண்டும் எனவும் பி. பி. ஸி. சுட்டிக்காட்டியுள்ளது.

பி.பி,ஸியின் இவ்விமர்சனம், இனப்பிரச்சினைக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏற்புடைய தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கவில்லை என்பதைத் தெளிவாகவே சுட்டிக்காட்டுகின்றது. அத்தோடு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டுமானால், அதற்கான முயற்சியையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வற்புறுத்துவதாகவும் உள்ளது.

மேலும் அரசியல் தீர்வின்றிஇந்நிலையே தொடருமானால், ஆயுதப் போராட்டம் தீவிரமடைவது தவிர்க்க முடியாது என்பதையும் பி. பி. ஸி. சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது சிறிலங்கா அரசு ஏற்புடைய தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்காததினால், யுத்தம் தொடர்ந்து நீடிப்பது தவிர்க்க முடியாததுஎன்பதே பி.பி.ஸி.யின் கருத்தோட்டமாகும். அதாவது, தமிழ் மக்கள் யுத்தத்தை தொடர்ந்து நடத்தியே ஆகவேண்டும். என்ற நிர்ப்பந்தத்தை சிங்கள அரசு ஏற்படுத்தியுள்ளது. சிங்களப் பேரினவாதத்தின் இவ்வாறான நிலைப்பாடே கடந்த காலத்திலும், யுத்தம் தோன்றவும் விரிவடையவும் காரணமாக இருந்தது.

தமிழ் மக்கள் போர் வெறியர்கள் அல்ல. வன்முறையாளர்களும் அல்ல. அமைதியை விரும்புபவர்கள். இதனை ஆங்கிலேயர் கால நிர்வாக அறிக்கைகளில் இருந்தே தெளிவாகக் காணலாம். ஆனால், ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறிய காலத்தில் இருந்து சிங்களப் பேரினவாதம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதிலும், தமிழ் மக்கள் தமது உரிமைக்காக எடுத்தவுடன் ஆயுதப் போராட்டத்தில் குதித்துவிடவில்லை. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக,

## உளவுப் பொருள் விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் நடமாடும் வர்த்தகப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பொருள் விநியோகம் இன்று பிற்பகல் இரண்டுமணி முதல் ஆறுமணிவ ர உடுவில் ஆலடிப் பகுதியில் வைத்து வழங்கப்படவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டுமணிமுதல் ஆறுமணி வரை உடுவில்கிழக்குஅண்ணா சனசமூக நிலையத்திலும், மறுநாள் புதன்கிழமை தாவடி வடக்கு புளிசிட்டிப் பகுதியிலும் வியாழனன்று தாவடி காளிகோவிலடிப் பகுதியிலும், வெள்ளிக்கிழமையன்று இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்திலும் இவை விநியோகிக்கப்பட இருக்கின்றன.

# எதிரணி கூட்டுக்கு எதிராக அநுராகுழு கிளர்ச்சி?

தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் கூடி புதிதாக அமைத்த எதிர்க்கட்சி கூட்டணியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் மோதல் நிலை உருவாகியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமக்கு போதியளவு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என அநுராபண்டாரநாயக்கா சார்பான குழுவினர் எதிரணி கூட்டணிக்கு எதிராக கிளர்ச்சி செய்யவும் தீர்மானித்துள்ளனர். இவர்களுக்கு ஹெல உறுமய பிரிவினரின் ஆதரவும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிரணிக் கூட்டணியின் நிர்வாகக் குழுவில் சந்திரிகாவின் ஆதரவாளர்களும் இடதுசாரி ஆதரவாளர்களுமே உள்ளனர் என அநுரா குழுவினர் குற்றம் சாட்டியுள்ளனர். நிர்வாகக் குழுவில் சந்திரிகா இடம்பெற்றிருந்த போதிலும் முன்னணி சுதந்திரக்கட்சி உறுப்பினர்களான மகிந்த ராஜபக்ஷ, லக்ஷ்மன் ஜெயக்கொடி, சி. வி. குணரட்ண ஆகியோருக்கு அதில் இடமளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வோதயாவின் நிதி அரசால் முடக்கம்

(கொழும்பு)

ஜேர்மனி அரசாங்கத்தினால் சர்வோதய இயக்கத்திற்கெனஒதுக்கப்பட்ட பணம் முடக்கப்பட்டு இருப்பதாக சர்வோதய இயக்கத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா கூறியுள்ளார்.

ஜேர்மனி அரசாங்கம் புனர்வாழ்வுப் பணிக்கென 280 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததாகக் குறிப்பிட்ட ஏ. ரி. ஆரியரத்னா மேலும் கூறுகையில் இப்பணம் முழுவதும் இலங்கையில் செயற்படும் யூ. என். எச். சி. ஆர். குழுவிற்கும் சர்வோதயாக் குழுவினருக்கும் ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், கொழும்பிலுள்ள ஜேர்மனிய அரசின் தூதுவரகத்திற்கு இடையே அண்மையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

சேவாலங்கா பவுண்டேசன் எனப்படும் நிறுவனத்திற்கு ஜேர்மன் அரசாங்கத்தின் நிதியுதவியில் 66.19 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதனைப் பயன்படுத்தி இந்நிறுவனம் வவுனியா, அநுராதபுரம், திருக்கோணமலை மாவட்டங்களில் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

ஜேர்மன் அரசாங்கத்தின் இந்நிதியுதவித் திட்டம் மொத்தம் 280 மில்லியன் ரூபாவை உள்ளடக்கியது எனவும், 50 மில்லியன் ரூபா யூ. என்.எச். சி. ஆருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த ஜேர்மன் தூதுவரக அதிகாரிகள் மேலும் விபரங்களை வெளியிட மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

## தெரிவுக்குழு குறித்து 7கட்சிகள் கூடி ஆராய்வு

பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்று ஏழு தமிழ் கட்சிகளும் கூடி கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாக பிரிப்பதான தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை ஆட்சேபித்து இனி தெரிவுக்குழு நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதில்லை என இந்த தமிழ் குழுக்கள் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்காலராநோய் பரவி வருகின்றது

கிளிநொச்சிப் பகுதியில் 'காலரா' நோய் வேகமாகப் பரவி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பின்தங்கிய கிராமப்பகுதிகளான வட்டக்கச்சி, இராமநாதபுரம், வர் புரம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆயிரக் கணக்கானோர் இந்நோய்க்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை டாக்டர்கள் குழு ஒன்று சம்பந்தப்பட்ட பகுதிகளில் வைத்திய சேவை நிலையங்களை திறந்து வைத்து மருத்துவ நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (யோ)

## கடலில் மீட்ட சிலையை கோயிலுக்கு வழங்கவும்

அறங்காவலர் கோரிக்கை

காலிக்கடலில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட இந்துத் தெய்வ விக்கிரகத்தை காலி சிவன் கோயிலுக்கு வழங்குமாறு அக்கோயிலின் அறங்காவலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலிக்கடலில் கண்டெடுக்கப்பட்ட இந்த சுப்பிரமணியர்சிலை காலிபொலீஸ் தலைமையகத்திலிருந்து தற்போது கொழும்பு தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

## கைதடி வைத்தியசாலை மருந்துவகைகள் வந்தன

(வடமராட்சி)

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் 'குமண' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு வழங்கப்பட்டன.

இவ்வைத்தியசாலையில் போதிய மருந்து வகைகள் இல்லாமல் நோயாளிகள் பல கஷ்டங்களை அனுபவித்திருந்ததையிட்டு கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் இக்கப்பலில் 984 பார்சல்கள் கொண்ட மருந்துவகைகள் வந்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

மற்றும் எஸ். வி. எம்.முருகேசு தனியார்மருத்துவ நிலையத்திற்கும் 2832 பார்சல்கள் கொண்ட மருந்து வகைகளையும் அரசாங்க அதிபர் பெற்றுக்கொடுத்துள்ளார். (யோ)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம்வீதியில் பேர்ஸ் ஒன்று சிறுதொகை பணத்துடன் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## விளையாட்டு

(மானிப்பாய்)

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் மாபெரும் ஹொக்கி விளையாட்டு இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக அணியினருக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையில் போட்டிகள் நடைபெற உள்ளன. (07)

❋ ❋

யாழ். இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை 12 ஆம் திகதியும் சனிக்கிழமை 13ஆம் திகதியும் இடம்பெற்றது.

இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் விளையாடிய கெங்காதரன் மிகவும் சிறப்பாக விளையாடி 71 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. [44]

❋ ❋

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். [86]

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

கட்டப்பிராய் சின்னப்பு குணசேகரம் என்பவரால் 10-03-93 புதன் அம்மன் றோட்டில் ஒரு தங்க கைச் சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி கீழே உள்ள விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும்: றேடியோஸ்பதி 58, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### கூட்டம்

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மரம் நடுகைத் திட்டத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான சேமிப்புப்புத்தகம் வழங்கல் பற்றிய கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் வடமராட்சிப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

## முதல் பெண் சட்டமா அதிபர் அமெரிக்காவில் நியமனம்

அமெரிக்காவின் முதல் பெண் சட்டமா அதிபராக புளோரிடாவைச் சேர்ந்த ஜெனட்ரினோ (54) அமெ

அதி உயர்பதவியான சட்டமா அதிபர் பதவியை ஜெனட் ரினோவிற்கு வழங்க 98 உறுப்பினர்கள் கொண்ட செனட்

## பம்பாய் குண்டுவெடிப்பு விசாரணை;

# இந்திய புலனாய்வுத்துறை

யாததுஎன்பதே பி.பி.ஸி.யின் கருத்தோட்டமாகும். அதாவது, தமிழ் மக்கள் யுத்தத்தை தொடர்ந்து நடத்தியே ஆகவேண்டும். என்ற நிர்ப்பந்தத்தை சிங்கள அரசு ஏற்படுத்தியுள்ளது. சிங்களப் பேரினவாதத்தின் இவ்வாறான நிலைப்பாடே கடந்த காலத்திலும், யுத்தம் தோன்றவும் விரிவடையவும் காரணமாக இருந்தது.

தமிழ் மக்கள் போர் வெறியர்கள் அல்ல. வன்முறையாளர்களும் அல்ல. அமைதியை விரும்புபவர்கள். இதனை ஆங்கிலேயர் கால நிர்வாக அறிக்கைகளில் இருந்தே தெளிவாகக் காணலாம். ஆனால், ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறிய காலத்தில் இருந்து சிங்களப் பேரினவாதம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதிலும், தமிழ் மக்கள் தமது உரிமைக்காக எடுத்தவுடன் ஆயுதப் போராட்டத்தில் குதித்துவிடவில்லை. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக, நடாத்திய சாத்வீகப் போராட்டங்கள் தோல்வியில் முடிவடைந்த பின்னரே ஆயுதப் போராட்டம் நடத்துவதைத்தவிர வேறுவழி இல்லை என்ற ரீதியில் தமது போராட்டத்திற்கு ஆயுத போராட்ட வடிவம் கொடுத்தார்கள். அதாவது சாத்வீகப் போராட்ட காலத்தில் கிடைத்த அவமானமும், ஏமாற்றமும், துன்புறுத்தலுமே ஆயுதப் போராட்டத்திற்கு அவர்களை இட்டுச் சென்றது.

ஆனால், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட சில தமிழ்க்குழுக்கள் இன்று தாம் ஜனநாயக வழியில் திரும்பியுள்ளதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. இதனை சிங்கள அரசும் தனது அரசியல் லாபத்திற்காக பயன்படுத்தி வருகின்றது. ஆனால், அவர்கள் உண்மையில் தமது போராட்டத்தையும், அரசியலையும் நடத்திச் செல்ல முடியாமல் சரணாகதி அடைந்துள்ளனரே ஒழிய, சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்ததினாலோ அன்றித் தீர்த்துவிடும் என்ற நம்பிக்கையினாலோ அல்ல.

ஆனால், இன்று தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையானது மீண்டும் ஒருமுறை தமிழர் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்துவதைத்தவிர வேறுவழி இல்லை என்பதை உலகிற்கு வலியுறுத்தி உள்ளது. இதனைத் தமிழ் குழுக்களும் விரும்பியோவிரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்த யதார்த்த நிலையானது, இதுவரை இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப்புலிகளே முட்டுக்கட்டையாக உள்ளனர் எனக் கூறிவந்த சிலருக்குஒரு நல்ல படிப்பனையாகும். அத்தோடு, சிங்களப் பேரினவாதத்தின் கடந்தகால நடவடிக்கைகளை விளங்கிக் கொள்ளாதவர்களுக்கும் சிறப்பானதொரு உதாரணமாகும். அதாவது, வரலாற்றிலிருந்து படிப்பினை பெறாதவர்களுக்கு இது ஒரு சிறப்பான நேரடி அனுபவமாகும். இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப்புலிகளோ அன்றி தமிழ் மக்களோ தடையாக இல்லை. சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையும், விட்டுக்கொடுக்காத தன்மையுமே தடையாகவுள்ளது என்பதே அதுவாகும்.

ஆனால், இதனை இன்னமும் புரிந்து கொள்ளாது, சிங்களப்பேரினவாதம் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டுவிடும் என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் யாராவது நம்புவார்களே ஆயின் அவர்கள் உண்மையில் சுயசிந்தையுடன் இருக்கின்றார்களா என்று கேட்பதில் தவறு ஏதுமில்லை.

---

இடையே அண்மையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்ப

யிட மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

## தெரிவுக்குழு குறித்து 7கட்சிகள் கூடி ஆராய்வு

பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்று ஏழு தமிழ் கட்சிகளும் கூடி கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாக பிரிப்பதான தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை ஆட்சேபித்து இனி தெரிவுக்குழு நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதில்லை என இந்த தமிழ் குழுக்கள் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

மூலம் எடுத்து வரப்பட்டு வழங்கப்பட்டன.

இவ்வைத்தியசாலையில் போதிய மருந்து வகைகள் இல்லாமல் நோயாளிகள் பல கஷ்டங்களை அனுபவித்திருந்ததையிட்டு கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் இக்கப்பலில் 984 பார்சல்கள் கொண்ட மருந்துவகைகள் வந்து விநியோகிக்கப்பட்

---

யும் அரசாங்க அதிபர் பெற்றுக்கொடுத்துள்ளார். (யோ)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம்வீதியில் பேர்ஸ் ஒன்று சிறுதொகை பணத்துடன் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

---

வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மரம் நடுகைத் திட்டத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான சேமிப்புப்புத்தகம் வழங்கல் பற்றிய கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் வடமராட்சிப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

---

## முதல் பெண் சட்டமா அதிபர் அமெரிக்காவில் நியமனம்

அமெரிக்காவின் முதல் பெண் சட்டமா அதிபராக புளோரிடாவைச் சேர்ந்த ஜெனட்ரினோ (54) அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் சட்டத்துறையில் அதி உயர்பதவியான சட்டமா அதிபர் பதவியை ஜெனட்ரினோவிற்கு வழங்க 98 உறுப்பினர்கள் கொண்ட செனட்டில் அனைவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

## பா.ஜனதா - அ.தி.மு.க உறவு தமிழகத்திற்கு ஆபத்து

-ஜனதாதளம் எச்சரிக்கை

(சென்னை)

பாரதீய ஜனதாக்கட்சியோடு அ.இ அ.தி மு.க உறவு பூண முற்பட்டிருப்பதால் தமிழகத்தில் மதக்கலவரங்கள் மற்றும் வன்முறைகள். ஏற்படலாம் என்று தமிழக ஜனதா தளம் எச்சரிக்கை செய்துள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தப் புதிய கூட்டணி உறவினால் தமிழகத்தில் பயங்கரமானவிளைவுகள் ஏற்படும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவின் ஆட்சிமுறை; வாக்கெடுப்பிற்கு முயற்சி

ரஷ்யாவில் அதிகார கெடுபிடியை தீர்க்கும் முயற்சியாக அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவது குறித்து ரஷ்யப் பாராளுமன்றம் அடுத்த மாதத்தில் விவாதம் ஒன்றை நடத்த வேண்டுமென ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாஜனாதிபதி தலைமையிலான குடியரசாக மாற வேண்டுமென அபிப்பிராயம் கொண்டிருக்கும் யெல்ட்சின் இது சம்பந்தமாக நகல் தீர்மானம் ஒன்றை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அங்கு நடந்த விவாதத்தில் இத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

இதையடுத்து இவ்விவகாரம் தொடர்பாக பொதுசன அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் வகையில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டுமென ரஷ்ய அதிபர் யெல்ட்சினும், அவரது ஆதரவாளர்களும் திட்டமிட்டுவருவதாகத் தெரிய வருகிறது.

## அமெரிக்க ராணுவ உதவி எல்சல்வடோருக்கு நிறுத்தம்

### மனித உரிமை மீறல் காரணமாம்

எல்சல்வடோருக்கான 11 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவி நிறுத்தப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மனித உரிமைமீறல்சம்பவங்களுடன் தொடர்புடைய மூத்தஇராணுவ அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய எல்சல்வடோர்அரசுதவறியதே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்திற்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையடுத்து எல்சல்வடோர் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பொன்சே இராஜினாமா செய்துள்ளார்.

---

### பம்பாய் குண்டுவெடிப்பு விசாரணை;

## இந்திய புலனாய்வுத்துறை அமெரிக்க உதவியை நாடும்!

(டில்லி)

பம்பாய் குண்டு வெடிப்புகளுக்கு காரணமானவர்களை

### சந்திப்பு

மத்திய அரசின் இணை அமைச்சர்திருமதி மாக்கிரேட் ஆல்வா நேற்று சென்னையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் அதிகமாக நீடித்த இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களைப் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### மேயர் அதிர்ச்சி

(லண்டன்)

பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவங்களையடுத்து பிரிட்டன் பிரதமர் ஜோன்மேயர் அதிர்ச்சி தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

நடைமுறை ரீதியில் பிரிட்டன் இது விடயத்தில் உதவ முடியுமா என்பதைக் கண்டறியுமாறும் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் புதுடில்லியிலுள்ள பிரிட்டன் தூதுவருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கண்டறிய இந்தியப் புலனாய்வுத்துறை அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது.

அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையினதும் மத்திய பொலீஸாரினதும் உதவிகளை இந்திய புலனாய்வு அதிகாரிகள் நாடியுள்ளதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இது தொடர்பாக சர்வதேச பொலீஸின் உதவியை இந்தியா நாடவுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஆறு இஸ்லாமிய மத அடிப்படைவாத குழுக்கள் மற்றும் பாகிஸ்தானின் ஐ. எஸ். ஐ. புலனாய்வுப் பிரிவு ஆகியவை பம்பாய் குண்டு வெடிப்புக்குப் பின்னணியில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுவதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பம்பாய் இரத்த வங்கியில் இரத்தம் தட்டுப்பாடு

பம்பாய் குண்டு வெடிப்பினால் காயமடைந்தவர்களின் தொகை அதிகரித்துள்ளதால் பம்பாய் வைத்தியசாலைகளில் உள்ள இரத்த வங்கிகளில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு பம்பாயின் பல இடங்களில் இரத்த தான முகாம்கள் நடைபெற்று வருகின்றன. பம்பாய் குண்டு வெடிப்புகளினால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பம்பாயில் பல பகுதிகள் பொலீஸாரால் 'சீல்'

பம்பாய் குண்டு வெடிப்பு சம்பவங்களையடுத்து புலனாய்வுகளை மேற்கொள்வதற்காக பம்பாய் பங்குசந்தை, எயர் இந்தியா அலுவலகம், கடவுச் சீட்டு அலுவலகம் ஆகியவற்றைச் சூழவுள்ள பகுதிகள் பொலீஸாரினால் மூடப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதியில் வழமையான அலுவல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் வெடிகுண்டு நிபுணர்களும், தடய அறிவியலாளர்களும் குண்டுவெடிப்பினால்பாதிக்கப்பட்ட பொருள்களையும் எஞ்சிய பகுதிகளையும் ஆராய்ந்து வருகின்றனர்.

## பாரதீய ஜனதா ஆதரவு

(டில்லி)

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் பீட்டர் அல்போன்ஸ் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி காங்கிரஸ் கட்சியினர், அ. இ. அ. தி. மு. க வின்மீது கண்டனக் கணைகளையும், விமர்சனத்தையும் தொடுத்த போது பாரதீய ஜனதாக் கட்சியினர் அ. இ. அ. தி. மு. க. விற்கு ஆதரவாகக் குரல்கொடுத்தனர்.

நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

# ஜெயலலிதா - அத்வானி அடுத்தவாரம் சந்திப்பு

## கூட்டு குறித்துப் பேசுவர்?

(சென்னை)

காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் செல்வாக்கு இழந்துவிட்டது. பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைத்தால் மத்தியில் அக்கட்சி ஆட்சியமைக்கும் போது அ.தி.மு.கவுக்கு மூன்று மந்திரிப் பதவிகள் கிடைக்கும் என்று தமிழக நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் கூறியுள்ளார்.

இதேவேளை எதிர் வரும் 21-ம் திகதி சென்னைக்கு வரவிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் போயஸ் கார்டன் இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தெரியவருகிறது.

## ஆசியான் நாடுகளுடன் உறவு இந்தியா விருப்பம்

(டில்லி)

ஆசியான் அமைப்பில் அங்கம் வகிக்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்வது என்று இந்தியா முடிவு செய்துள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் இப் பிராந்திய நாடுகளுடன் பொருளாதார உறவை வலுப்படுத்துவதன் மூலம், இந்தியாவின் பொருளாதாரநிலையைப் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் தெரியவருகின்றது.

எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் ஜகார்த்தாவில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரசிம்மராவ் செல்லும் போது இந்தோனேசியா சிங்கப்பூர், புருணை, மலேசியா ஆகிய ஆசியான் நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இதற்கான பேச்சுக்களை நடதத வுள்ளார்.

## மத்திய அரசுமீது தாக்குதல்

(சென்னை)

1993/94-ம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தை நேற்று முன்தினம் சபையில் தாக்கல் செய்து பேசிய நிதிஅமைச்சர் நெடுஞ்செழியன் மத்திய அரசின் நிதி நிலை அணுகுமுறையைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

சரக்குவரியை அகில இந்திய அளவில் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். சுமார் பதினைந்து கோடி ரூபாவிற்கு வரிச்சலுகை அளித்துள்ள தமிழக அரசின் இந்த பட்ஜெட்டில் 555 கோடி ரூபா துண்டு விழும் தொகையாகக்காட்டப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## வெளிச்சம்

தார்.

மேலும் அவ்வழியால் வந்த வேறு ஒரு படகும் முன்புவந்த படகுடன் சேர்ந்துகொண்டு கடற்பரப்பை நோக்கி எறிகணைவீச்சையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டது. இதனால் அச்சமடைந்த மீனவர்கள் தமது உபகரணங்களைக் கடலில் விட்டுவிட்டு உயிரைக் காக்கும் பொருட்டு கரை சேர்ந்தனர்.

இச்சம்பவத்தில் ஆ. பரந்தாமன்(வயது 23) என்பவரின் பதினான்கு பீஸ் வலைகளும், மா. வரதராசா என்பவரின் எட்டுப் பீஸ் வகைகளும், த. ராசன் என்பவரின் இரண்டு பீஸ் வலைகளும் வேறு சில மீனவர்களின் பெறுமதிமிக்க தொழில் உபகரணங்களும் கடலில் விடப்பட்டன. (41)

## கடற்படை

எடுக்கப்பட்டதாக தெரியவரவில்லையென்றும் கடற்படை கெடுபிடிநிலை தொடர்ந்து ஏற்பட்டு வருவதால் மீனவர் குடும்பங்கள் ஜீவமரண போராட்டத்திலேயே இன்னமும் இருந்து வருவதாகவும் செய்தியாளருக்கு மீனவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(யோ)

## புனித சூசையப்பர் திருநாள்

எண்ணிலடங்கா பக்தகோடிகளின் உள்ளத்தில் உறைந்து, வேண்டும் அருள் பாலிக்கும் புனித சூசையப்பர் திருநாள் வழமைபோல் நடைபெறவுள்ளது.

அதனையொட்டி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 00 மணிதொடக்கம் மூன்று நாட்களுக்கு மாலை ஆராதனைகள் பங்குத்தந்தை வண. துரம் அடிகளார் தலைமையில் நடைபெறும். எதிர்வரும் 19 -ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு முதற் பூசைப் பலியும், 6.30 மணிக்குத் திருநாட் பூசைப்பலியும் ஒப்புக்கொடுப்பதுடன் விழா நிறைவுபெறும்.

## வெளிவாரி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகளுக்கான திகதிகள் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதிக்கு பின்னரே அறிவிக்கப்படும் என கொழும்பிலிருந்து கிடைத்த தகவலொன்று தெரிவிக்கிறது.

இப்பரீட்சைகள் வழமையாக ஏப்ரல் மாதத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர், படை அதிகாரிகள் எல்லைக்கிராமம் சென்றனர்

[திருமலை]

பதவியா, ஹொரவப்பொத்தனை ஆகிய பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களுக்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன் தினம் நேரில் விஜயம் செய்தார்.

இப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளை அமைச்சர் பார்வையிட்டதாகவும் பதவியாவில் எல்லைக்கிராமங்களில் உள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்புகள் குறித்து கிராமத்தவர்களுடன் பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டது

அமைச்சர் ஜோன் அமரதுங்கவுடன் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, மேஜர் ஜெனரல் றோகான் தளுவத்த பிரிகேடியர் லியனகே, பிரிகேடியர் அசோகா சில்வா, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

## வெடிக்காத நிலையில் ஸ்கூட்டர் குண்டு

பம்பாய் நகரில் நேற்று சோதனை நடத்திய பொலீசார் ஸ்கூட்டர் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த வெடிக்காத குண்டு ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர் இந்த ஸ்கூட்டர் கடந்தவெள்ளிக்கிழமைகுண்டு வெடிப்பு நிகழ்வதற்கு முன்பாக பம்பாயின் புறநகர்ப் பகுதியில் இருக்கும் ரயில் நிலையம் ஒன்றுக்கு சமீபமாக நிறுத்தப்பட்டதாகவும் பொலீசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பம்பாய் குண்டு வெடிப்பு சம்பவங்களில் வெளிநாட்டுத் தொடர்புகள் இருப்பதாக வெளிவந்த சில செய்திகளையும்பம்பாய்நகரபொலீஸ் துறை ஆணையாளர் மறுத்துள்ளார். வெடிக்காத குண்டு கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருளை இனங்காண உதவும் என்றும் இந்தச் சம்பவம் தொடர்பான புலனாய்விற்காக எந்தவொரு வெளிநாட்டுப் பொலீஸ் அமைப்பின் உதவியையும் இதுவரை நாடவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## புக்காரா விமானம்

'சியாமாசெட்டி' ரகபோர் விமானங்களைவிட, புக்காரா தரத்தில் சிறிதளவு உயர்ந்தது. சியாமாசெட்டிக்கு ஒரு காற்றாடி உண்டு, புக்காராவுக்கு இரண்டு. சியாமாசெட்டிக்கு ஒரு விமானி மட்டுமே இருப்பார்; அத்துடன் ஒரே பறப்பின் போது 300 கி. கி. எடை

# இளைஞர் மர்ம கொலை குழியிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் கொலைசெய்யப்பட்டு மூன்று தினங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்ட ஒருவரின் சடலம் நேற்று செம்மணி சுடலை அருகே கண்டுபிடிக்கப்பட்டது.

நல்லூர் ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த சாம்பசிவம் குணராஜா (வயது 27) என்பவரது சடலம் இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இச் சடலத்தின் இரண்டு கைகளும் வெளியே தெரிந்ததைத் தொடர்ந்து தமிழீழக் காவல் துறையினர் இதனை மீட்டெடுத்தனர். இக்கொலை குறித்தபுலன்விசாரணைநடை பெற்றுவருவதாகத் தெரியவருகிறது. (நி)

## நல்லூர் வர்த்தக சங்க உதவித்திட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நல்லூர் வர்த்த சங்கம் எதிர் வரும் தமிழ் புது வருட தினத்தில் இருந்து வர்த்தக சங்க உறுப்பினருக்கு பல உதவித் திட்டங்களை அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ளது.

தமது வர்த்தக சங்கத்தில் அங்கத்தவர் எவராவது மரணம் அடைந்தால் அவர்களுக்கு ரூபா 10. 000 அன்பளிப்பாக வழங்குவதென்றும் தமது சங்க உறுப்பினருக்கு ரூபா 10,000 கடனாக வழங்குதல் போன்ற திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளனர். (நி)

## உற்சவம் இல்லை

தவக்கால மூன்றாம், நான்காம் வாரங்களில் வருடந்தோறும் நடைபெறும் புகழ்பெற்ற பாலைதீவு, கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருநாட்களும்கடந்தசிலவருடங்களைப் போன்று இம்முறை நடைபெறாதென திருச்சபை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது. (21)

## துப்பாக்கிப்பிரயோகம்

(தொல்புரம்)

சுழிபுரம் திருவடி நிலைத் தீர்த்தக்கரைக் கடலில் குளித்துக்கொண்டிருந்தவர்களை நோக்கி நேற்று முற்பகல் 11.45 மணியளவில் காரைநகர் கரையோர காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

இச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது.

## செஞ்சோலைச் சிறாரின் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

செஞ்சோலை மகளிர் பாடசாலைச் சிறார்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நேற்று யாழ். கனகரட்ணம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நேற்று மாலை 3 மணியளவில் செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜெனனி தமிழீழத் தேசியக்கொடியைஏற்றி வைத்ததைத் தொடர்ந்து விளையாட்டுப்போட்டி ஆரம்பமானது.

இப்போட்டிகளைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்களும், பெருமளவு பொதுமக்களும் பார்வையிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத்தளபதி, கடற்புலிகள் மகளிர் அணிப் பொறுப்பாளர் உட்பட பல பிரமுகர்கள் இவ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை வழங்கினர்.

## மட்டு விஜயம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜெசிட்டாஷெபர் மட்டக்களப்பு பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்துள்ளார். இவருடன் தூதுவரகத்தின் இரண்டாவது செயலாளரான பிரட்ரி பிரிடனும் சென்றிருந்தார் என்றும் கிழக்கு மாகாண இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம மட்டக்களப்பு ஆயர் மற்றும் அரசாங்க முக்கியத்தர்களையும் சந்தித்தார் என்றும் மேலும் தெரியவருகிறது.

## டாக்டர்

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தன் மருத்துவக் கல்வியைப் பூர்த்திசெய்து, பின் தன் பட்ட மேற்படிப்பினை இலண்டனில் தொடர்ந்தார். மருத்துவத்தில் டாக்டர் பட்டம் (M. D) பெற்ற இவரை இலண்டன் அரச மருத்துவ நிபுணர் கழகம் தன் கௌரவ உறுப்பினராக (FRCP) ஏற்றுக்கொண்டுள்ளது.

கொழும்பு, வெலிசற, மன்னார் ஆகிய இடங்களில் கடமையாற்றிய இவர் 1981 முதல் யாழ்ப்பாணப்போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணராகக் கடமையாற்றி வருகிறார்.

இன்றைய சூழ்நிலையில்

## இடம் பெயர்ந்துள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கு நிவாரணம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்திருக்கும் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் வை. எம். சி, ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இச் சங்கத்தின் கூட்டத்தில் இக் கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருப்பதாக சம்மேளனத்தின் பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

சமூகப் பொறுப்புணர்ச்சியோடு, இவ்விருதுக்காக சிபார்சுகளைப் பெருமளவில் வழங்கிய அனைத்துப் பெருமக்களுக்கும், சமூக அமைப்புக்களுக்கும், இவ்விருதின் முக்கியத்துவத்தைச் சமூகத்தில் நிலை நிறுத்தப் பேருதவி புரிந்த பத்திரிகைகள், செய்தி ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் கம்பன் கழகம் நன்றி தெரிவித்

தார்.

மேலும் அவ்வழியால் வந்த வேறு ஒரு படகும் முன்புவந்த படகுடன் சேர்ந்துகொண்டு கடற்பரப்பை நோக்கி எறிகணைவீச்சையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டது. இதனால் அச்சமடைந்த மீனவர்கள் தமது உபகரணங்களைக் கடலில் விட்டுவிட்டு உயிரைக் காக்கும் பொருட்டு கரை சேர்ந்தனர்.

இச்சம்பவத்தில் ஆ. பரந்தாமன்(வயது 23) என்பவரின் பதினான்கு பீஸ் வலைகளும், மா. வரதராசா என்பவரின் எட்டுப் பீஸ் வகைகளும், த. ராசன் என்பவரின் இரண்டு பீஸ் வலைகளும் வேறு சில மீனவர்களின் பெறுமதிமிக்க தொழில் உபகரணங்களும் கடலில் விடப்பட்டன. (41)

அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். சுமார் பதினைந்து கோடி ரூபாவிற்கு வரிச்சலுகை அளித்துள்ள தமிழக அரசின் இந்த பட்ஜெட்டில் 555 கோடி ரூபா துண்டு விழும் தொகையாகக்காட்டப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## கடற்படை

எடுக்கப்பட்டதாக தெரியவரவில்லையென்றும் கடற்படை கெடுபிடிநிலை தொடர்ந்து ஏற்பட்டு வருவதால் மீனவர் குடும்பங்கள் ஜீவமரண போராட்டத்திலேயே இன்னமும் இருந்து வருவதாகவும் செய்தியாளருக்கு மீனவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(யோ)

நகரில் நேற்று சோதனை நடத்திய பொலீசார் ஸ்கூட்டர் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த வெடிக்காத குண்டு ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர் இந்த ஸ்கூட்டர் கடந்தவெள்ளிக்கிழமைகுண்டு வெடிப்பு நிகழ்வதற்கு முன்பாக பம்பாயின் புறநகர்ப் பகுதியில் இருக்கும் ரயில் நிலையம் ஒன்றுக்கு சமீபமாக நிறுத்தப்பட்டதாகவும் பொலீசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பம்பாய் குண்டு வெடிப்பு சம்பவங்களில் வெளிநாட்டுத் தொடர்புகள் இருப்பதாக வெளிவந்த சில செய்திகளையும்பம்பாய்நகரபொலீஸ் துறை ஆணையாளர் மறுத்துள்ளார். வெடிக்காத குண்டு கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருளை இனங்காண உதவும் என்றும் இந்தச் சம்பவம் தொடர்பான புலனாய்விற்காக எந்தவொரு வெளிநாட்டுப் பொலீஸ் அமைப்பின் உதவியையும் இதுவரை நாடவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## புக்காரா விமானம்

'சியாமாசெட்டி' ரகபோர் விமானங்களைவிட, புக்காரா தரத்தில் சிறிதளவு உயர்ந்தது. சியாமாசெட்டிக்கு ஒரு காற்றாடி உண்டு, புக்காராவுக்கு இரண்டு. சியாமாசெட்டிக்கு ஒரு விமானி மட்டுமே இருப்பார்; அத்துடன் ஒரே பறப்பின் போது 300 கி. கி. எடைகொண்ட வெடிகுண்டுகளைக் காவிச்சென்று வீசவல்லது (50 கி. கி. கொண்ட ஆறு குண்டுகள்) இதன் வேகம் மணிக்கு 260 மைல்களாகும்.

இதேவேளை புக்காராவில் இரண்டு விமானிகள் பயணம் செய்ய முடியும். ஒரே தடவையில் 1500 கி. கி. எடையுடைய வெடிகுண்டுகளை எடுத்துச் செல்ல முடியும். அது 500 கி. கி. கொண்ட மூன்று குண்டுகளாகவோ அல்லது 250 கி. கி. கொண்ட ஆறு குண்டுகளாகவோ அல்லது 125 கி. கி. கொண்ட பன்னிரண்டு குண்டுகளாகவோ இருக்கும். இதன்வேகம் மணிக்கு 310 மைல்களாகும்.

''சியாமாசெட்டி'' யைப் போன்றே குண்டுகளையும் வீசும். றொக்கெட்டுக்களையும்ஏவும். அத்துடன் 20 மி. மீ. அல்லது 30 மி. மீ. பீரங்கியையும் பொருத்தமுடியும், எது எப்படியிருந்தாலும் ஒரே பறப்பில் 1500 கி. கி. கொண்ட குண்டுகளை மட்டுமே கொண்டுசெல்ல முடியும்

- நன்றி விடுதலைப் புலிகள்

## மாவீரர் இருவருக்கும் மக்கள் இறுதி அஞ்சலி

(முல்லைத்தீவு)

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் திருவருட்செல்வன் / மோகன்ராம், லெப்டினன்ட் மாறன் ஆகியோரது புகழுடல்கள் நேற்று முல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெருந்திரளான மக்கள் இம் மாவீரர்களுக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். இந்த இறுதி அஞ்சலியை தொடர்ந்து இவ்விரு மாவீரர்களினதும் புகழுடல்கள் முல்லை மாவட்ட மாவீரர் துயிலும் இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழிகளில் விதைக்கப்பட்டது.

## தொண்டர்

12,000 பேர் தெரிவு செய்யப்பட்டு 8,000பேருக்கு நியமனம் வழங்கப்பட்டு விட்டது என்று நியமனம் கிடைக்காதவர்களின் விண்ணப்பம் எந்தகாரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் நியமனம் தொடர்பாக எதுவும் தவறு நடந்திருந்தால் மட்டும் மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கண்ணிவெடியில்

ஈடுபட்டிருந்த இவர், அம்பாறை படுலுஹண்டியா என்ற இடத்தில் கண்ணிவெடியில் சிக்கிச் காயப்பட்டார் இவர் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

## இடைக்காட்டில்

இவர் தனது தோட்டத்தை பார்வையிட சென்ற போதே மேற்படி சம்பவம் நடைபெற்றதாக தெரியவருகின்றது.

( நி )

விளையாட்டுப்போட்டி ஆரம்

## டாக்டர்

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தன் மருத்துவக் கல்வியைப் பூர்த்திசெய்து, பின் தன் பட்டமேற்படிப்பினை இலண்டனில் தொடர்ந்தார். மருத்துவத்தில் டாக்டர் பட்டம் (M. D) பெற்ற இவரை இலண்டன் அரச மருத்துவ நிபுணர் கழகம் தன் கௌரவ உறுப்பினராக (FRCP) ஏற்றுக்கொண்டுள்ளது.

கொழும்பு, வெலிசற, மன்னார் ஆகிய இடங்களில் கடமையாற்றிய இவர் 1981 முதல் யாழ்ப்பாணப்போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணராகக் கடமையாற்றி வருகிறார்.

இன்றைய சூழ்நிலையில் கல்வியாளர்கள் பலர் இந்நாட்டின் துன்பச்சூழ்நிலை கண்டு, தங்களுடைய சொந்த நலன் கருதி, தாயகம் விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தேசப்பற்றோடு இம்மண்ணுக்காகவும், துன்பப்படும் மக்களுக்காகவும் தொண்டாற்றிவரும் ஒரு சிலருள் டாக்டர் சிவகுமாரன் குறிப்பிடத்தக்கவர். வெளிநாடு சென்று தான் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளைத் தியாகம் செய்ததோடு வைத்தியத்தைத் தொழிலாகக் கருதாமல் தொண்டாகக் கருதிப் பணியாற்றும் சான்றோன். ஏழை, பணக்காரன், உறவினர், நண்பர் என்ற எந்தவிதப் பாகுபாடுமின்றி, ஜாதி, மத வேற்றுமைகளைக் கடந்து அரும்பணி ஆற்றும் அறிஞன்.

வைத்திய நிபுணர் என்ற வகையில் இங்கிருந்தபடி பிரத்தியேகமாகத் தான் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளைத் துறந்து, காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை பல அசௌகரியங்களுக்கு மத்தியில் மனநிறைவோடு தொண்டாற்றுவதோடு இப்போர்க் காலச் சூழ்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையைத் தொடர்ந்து இயங்கச் செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறார்.

தாம் சார்ந்த துறையினூடு தியாகவுணர்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம்மண்ணுக்காகத் தொண்டாற்றி எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் டாக்டர் சபாரட்ணம் சிவகுமாரன் அவர்களுக்கு இவ்வாண்டுக்குரியதும், முதல் முறையாக வழங்கப்படுவதுமான 1993 ஆம் ஆண்டுக்குரிய ''மகரயாழ் விருதை'' வழங்குவதில் கம்பன் கழகம் பெரிதும் மகிழ்வெய்துகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பரிசில்களை வழங்கினர்.

இடம் பெயர்ந்துள்ள

## ஓய்வூதியம் பெறுவோருக்கு நிவாரணம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்திருக்கும் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் வை. எம். சி, ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இச்சங்கத்தின் கூட்டத்தில் இக்கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருப்பதாக சம்மேளனத்தின் பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

சமூகப் பொறுப்புணர்ச்சியோடு, இவ்விருதுக்காக சிபார்சுகளைப் பெருமளவில் வழங்கிய அனைத்துப் பெருமக்களுக்கும், சமூக அமைப்புக்களுக்கும், இவ்விருதின் முக்கியத்துவத்தைச் சமூகத்தில் நிலை நிறுத்தப் பேருதவி புரிந்த பத்திரிகைகள், செய்தி ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் கம்பன் கழகம் நன்றி தெரிவித்துள்ளது.

முக்கியத்தர்களையும் சந்தித்தார் என்றும் மேலும் தெரிய வருகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 14-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8598

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-1665, 42-3239, 26-1658, 26-1169, 24-5137, 26-3294, 27-7711, 42-2151, 42-9345, 27-9825, 28-2657, 26-7949, 41-9111, 24-6699, 24-5703, 24-6646, 26-8138.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

25-7092, 41-9659, 42-1750, 27-1380, 43-1857, 28-3429, 27-4289, 27-6563, 28-6640, 22-4473, 22-3887, 26-6075, 24-6348, 28-4354, 28-8037, 26-5782.

## காணவில்லை

## நாராயசுவாமிகனகராஜன் (ராஜன்)

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட நாராயசுவாமி கனகராஜன் (ராஜன்) 23-02-93 மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குப்புறப்பட்டார். ஆனால் இதுவரையும் இவர் அங்கு போய் சேரவில்லை. சிவத்த நிறத்தையுடைய இவர் கடைசியாக நீல கிப்ஸ் சாறமும் பட்டர்கலர் சேட்டும் அணிந்திருந்தார். இவருக்கு வயது 22. தகவல் அறிந்தோர் கீழ்க்காணும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

| | |
|---|---|
| யோகாஸ் | சாந்தி |
| புடைவை மாளிகை | புடைவை மாளிகை |
| பெரிய கடை, | கண்டி வீதி, |
| யாழ்ப்பாணம். | கிளிநொச்சி. |

(4474)

## மரண அறிவித்தல்

## துரைச்சாமிப் பத்தர் செல்லம்மா

நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைச்சாமிப்பத்தர் செல்லம்மா 7. 3. 93இல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி துரைச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசுப்பத்தர் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் ஆவார். இவர்கனகம்மா, சிவபாக்கியம், தியாகராசா, பஞ்சாட்சரம், சரஸ்வதி, சிவமணி (இறைவரி திணைக்களம் கொழும்பு) மயில்வாகனம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை மயானத்திற்கு 15 3. 93 இன்று காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

| | |
|---|---|
| நாவற்குழி கிழக்கு, | தகவல்: |
| கேரதீவு வீதி, | து. தியாகராசா |
| தச்சன்தோப்பு. | து. பஞ்சாட்சரம் |
| (4475) | (மகன்மார்) |


ஸ்ரீதர் திரையரங்கில்...

“தமிழோசை”

தினசரி மாலை

4 மணிக்கும் 6 மணிக்கும்

காண்பிக்கப்படுகிறது. (சி-6149)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.